
# செப். 15 - பேரறிஞர் அண்ணா 116-வது பிறந்தநாள்!






# பவளவிழா ஆண்டில்... அண்ணா கண்ட தி.மு.க.!

**நீதிக் கட்சியை சி.நடேசனார், டி.எம்.நாயர், சர் பிட்டி தியாகராயர் ஆகியோர் நிறுவினர். நீதி கட்சியால் இட ஒதுக்கீடு, பெண்களுக்கு வாக்குரிமை, மதிய உணவுத் திட்டம் கொண்டுவரப்பட்டது.**

**நீதிக் கட்சியைத் தொடர்ந்து தந்தை பெரியார் அவர்களால் திராவிடர் கழகம் தோற்றுவிக்கப்பட்டது. திராவிடர் கழகம் மூட நம்பிக்கையில் இருந்து மக்களை மீட்டெடுத்தது, தந்தை பெரியார் பகுத்தறிவை மக்களிடத்தில் போதித்து மனிதர்களை சுயமரியாதை மிக்க மனிதர்களாக மாற்றியப் பெருமை தந்தை பெரியாருக்கே உண்டு.**

**தந்தை பெரியாரின் தளபதியாக இருந்த பேரறிஞர் அண்ணா அவர்கள், கொட்டும் மழையில் இராயபுரம் ராபின் சன் பூங்கா அருகில் 1949 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 17ஆம் நாள் திராவிட முன்னேற்றக் கழகத்தை தொடங்கினார். அப்போது பேரறிஞர் அண்ணா அவர்கள் நிகழ்த்திய உரை இதோ:**

“மழை பலமாகப் பெய்து கொண்டிருக்கிறது. பலர் பேச வேண்டும். சங்கடமான நிலைதான். விடாது மழை பெய்கிறது. அளவற்ற கூட்டம், தாய்மார்கள் தவிக்கின்றனர், மழையில் நின்று கொண்டே இருக்கிறீர்கள். சங்கடம்தான். ஆனாலும் சமாளிக்கிறீர்கள், இது போன்ற நிலையில் தான் நாட்டிலே சில காலம் கழகத்தின் வேலைகள் செயலற்றுக் கிடந்தன. சங்கடமானநிலை எற்பட்டது. சரி செய்தோம்.

திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றி விட்டது, திராவிடர் கழகத்திற்குப் போட்டியாக அல்ல, அதே கொள்கைப் பாதையில்தான் திராவிடர் கழகத்தின் அடிப்படைக் கொள்கைகளின் மீது தான் திராவிட முன்னேற்றக் கழகம் அமைக்கப்பட்டுள்ளது.

அடிப்படைக் கொள்கைகளில், கருத்துக்களில் மாறுதல், மோதல் எதுவும் கிடையாது, சமுதாயத் துறையிலே சீர்திருத்தம், பொருளாதாரத் துறையிலே சமதர்மக் கொள்கை, அரசியலில் வடநாட்டு ஏகாதிபத்தியத்தினின்று விடுதலை ஆகிய கொள்கைகள் தான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கோட்பாடுகளாகும்.

…தலைவரின் தலைமையைவிட்டு வெளியேறித் தனிக்குடித்தனம், தனி முகாம், தனிக் கட்சி திராவிட முன்னேற்றக் கழகம் அமைத்திருக்கிறோம். நாம் உழைத்து உருவாக்குவோம். இந்தக் கழகத்தை இத்தனை ஆண்டுகளிலும் நான் அறிந்த தலைவர் தெரிந்த தலைவர், பார்த்த தலைவர் இவர் ஒருவர்தான். வேறு தலைவரின் தலைமையில் நான் வேலை செய்தது கிடையாது. செய்யவும் மனம் வந்ததில்லை….




முதல் தி.மு.க. தலைமை அலுவலகம் – அறிவகம்

இதயப்பூர்வமான தலைவர், இதயத்திலே குடியேறிய தலைவர், நமக்கெல்லாம் அவ்வப்போது நல்வழி காட்டிய பெரியார் அமர்ந்த பீடத்தை தலைவர் பதவியை நாற்காலியை காலியாகவே வைத்திருக்கிறோம்…

திராவிடர் கழகமாகட்டும், திராவிட முன்னேற்றக் கழகமாகட்டும் படைவரிசை வேறு என்றாலும் கொள்கை ஒன்றுதான். கோட்பாடு ஒன்று தான். திட்டமும் வேறு அல்ல என்ற நிலை இருந்தே தீரும். படைவரிசை இரண்டுபட்டுவிட்டது என்று எக்காளமிடும் வைதீகபுரிக்கும், வடநாட்டு ஏகாதிபத்தியத்துக்கும் சம்மட்டியாக விளங்க வேண்டும்.

இரு கழகங்களும் இரு திக்குகளிலிருந்தும் வட நாட்டு ஏகாதிபத்தியத்தை ஒழித்து, வைதீகக் காட்டை அழித்துச் சமதர்மப் பூங்காவை திராவிடத்தைச் செழிக்கச் செய்தல் வேண்டும். அதிலே எந்தக் கழகம் பூங்காவை அமைத்தாலும் அதில் பூக்கும் பூக்கள், காய்கள், கனிகள் திராவிடத்தின் எழுச்சியை மலர்ச்சியைத்தான் குறிக்கும்.

இரு பூங்காக்களும் தேவை. ஒன்றோடொன்று பகைக்கத் தேவையில்லை. அவசியமும் இல்லை. எது மாலையாகப் போவது திராவிடத்திற்குத் தான் என்ற எண்ணம் வேண்டும்.

மழை பெய்து நின்று கறுத்த வானம் வெளுத்திருப்பதைப் போல, இன்று புதுக் கழகம் அமைத்து முன்னேற்ற வேகத்துடன் மோதல் இன்றிப் பணியாற்ற புறப்பட்டுவிட்டனர். கொள்கை பரப்புவதே நமது முதல் பணி, பகைமை உணர்ச்சியை அடியோடு விட்டொழிக்க வேண்டும்.

நான் கேட்கிறேன் தோழர்களே, எது முக்கியம்? நமக்கு இலட்சியம் தேவை என்று முடிவு செய்தோம். பிரச்சினை முடிந்தது, அத்தோடு இதோ நம் கண்முன் வடநாட்டு ஏகாதிபத்தியம் மக்களைப் பாழ்படுத்தும் பாசிசம் பதுங்கிப் பாய நினைக்கும் பழமை இவைதான் ஒழிய வேண்டும்.

பழமையும், பாசிசமும் முறியடிக்கப்படும் வரை ஓயமாட்டோம். உழைப்போம். உருவான பலனைக் காண்போம் அப்போது பெரியார், “பயல்கள் பரவாயில்லை, உருப்படியான வேலைதான் செய்கிறார்கள்” என்று உள்ளம் மகிழும் நிலை வரத்தான் போகிறது.




அறிவகத்திலிருந்து அன்பகத்திற்கு மாறிய தி.மு.க. தலைமை அலுவலகம்

முதல் வேலையாக எழுத்துரிமை, பேச்சுரிமை எதையும் அடக்கும் சர்க்கார் போக்கை எதிர்த்துப் போரிட திராவிட முன்னேற்றக் கழகம் முன்னணிப்படை அமைய வேண்டும். அதில் பங்கு கொள்ள சமதர்மத் தோழர்களே வாருங்கள் என்று வரவேற்கிறேன். ‘பேச்சுரிமையைப் பறிக்காதே, எழுத்துரிமையைத் தடுக்காதே, புத்தகங்களைப் பறிமுதல் செய்யாதே என்று போரிடுவோம்.

பெரியாரே ; நீரளித்த பயிற்சி, பக்குவம் பெற்ற நாங்கள், உம் வழியே சர்க்காரை எதிர்த்து சிறைச்சாலை செல்லத்தான் வேண்டுகோள் விடுக்கிறோம் . துவக்க நாளாகிய இன்றே!”

**பேரறிஞர் அண்ணா - திராவிட முன்னேற்றக் கழகத் தொடக்க விழாவில்!**

★★★

அண்ணா அவர்கள் தி.மு.க. தலைமை அலுவலகமாக

இராயபுரத்தில் அறிவகம் கண்டார்,

அதற்கடுத்து தேனாம்பேட்டையில்

அன்பகம் கண்டார்,

அண்ணாவின் வழித் தோன்றல் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களோ,

பார் போற்றும் வகையில்,

தி.மு.க. தலைமை அலுவலகமாக இதோ கம்பீரமாக நிற்கும்

அண்ணா அறிவாலயம்

கண்டார்.

அன்று பேரறிஞர் அண்ணா அவர்களால் எந்தக் கொள்கை முழக்கத்துடன் தி.மு.க. தொடங்கப்பட்டதோ அதே கொள்கை முழக்கத்துடன் தி.மு.கழகம் இன்றைக்கு பவள விழா ஆண்டில் அடி எடுத்து வைக்கிறது.

தி.மு.கழகத்தின் பிதாமகன் பேரறிஞர் அண்ணா அவர்கள், தி.மு.கழகத்தைத் தொடங்கியபோது அவர் கொண்ட இலட்சியம், கொண்ட கொள்கைகளை முத்தமிழறிஞர் கலைஞர் நெஞ்சில் தாங்கி 49 ஆண்டுகள் தி.மு.கழகத்தின் தலைவர் பொறுப்பேற்று வழி நடத்தினார்.



தலைமைச் செயலகத்தில் முதலமைச்சர் பொறுப்பேற்ற அண்ணா!

தி.மு.கழகத்தின் முதல் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தான். பேரறிஞர் அண்ணா அவர்கள் தி.மு.கழகத்தின் பொதுச்செயலாளராக இருந்தார். அவர் பேச்சு, எழுத்து, மனித நேயத்தால் திராவிட முன்னேற்றக் கழகம் 6.3.1967 ஆம் ஆண்டு தமிழ்நாட்டு அரசில் முதன் முதலில் தடம் பதித்தது.

அப்போது திராவிட முன்னேற்றக் கழகத்தால் சுயமரியாதைத் திருமணங்கள் சட்டப்பூர்வ அங்கீகாரம் கிடைக்கப்பெற்றன.

பேருந்துகள் நாட்டுடைமை ஆக்கப்பட்டு மாநகரம் முதல் குக்கிராமங்கள் வரையில் அரசு பேருந்துகள் இன்றும் பவனி வருகிறது என்றால் முத்தமிழறிஞர் கலைஞர் முதல் அமைச்சராக இருந்த போது தான் பேருந்துகள் நாட்டுடைமை ஆக்கப்பட்டதே காரணமாக அமைந்திருக்கின்றன.

‘மெட்ராஸ் ஸ்டேட் ’சென்னை மாநிலம் என்று இருந்ததை ‘தமிழ்நாடு’ என்று பெயர் சூட்டி பார் போற்றும் வகையில் இன்றும் ‘தமிழ்நாடு, தமிழ்நாடு’ என்று உச்சரித்துக் கொண்டிருக்கிறோம் என்றால் அதற்கு முழு முதற் காரணம் திராவிட முன்னேற்றக் கழகம் பேரறிஞர் அண்ணா அவர்கள்தான்.

‘தமிழ்நாடு’ என்ற பெயர் மாற்றத்திற்காக எத்தனையோ போராட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

தொடர்ச்சி 6ஆம் பக்கம்